**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 90/ 2023**

Deposition of PW - 1 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 12.03.2026 in accordant with provisions of XLIV of 1989.

| | | | |
|---|---|---|---|
| Name | : குமார் | Age | : |
| Father's Name | : | Village | : |
| Calling | : | Taluk | : |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற வாகனம் என் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. விபத்து ஏற்பட்ட இடம் அகலமான பகுதி என்றால் சரிதான். நான் ஓட்டி சென்றது சரக்கு வாகனம். என் வாகனத்தில் மோதிய ஆட்டோ பயணியர் ஆட்டோ ஆகும். எதிரில் வந்த வாகனத்தை சுமார் 150 மீட்டர் தொலைவில் பார்த்தேன். எதிரில் வந்த வாகனம் என்னுடைய வாகனத்தில் திடீரென்று வலது பக்கமாக மோதியதால்தான் விபத்து ஏற்பட்டது. நான் ஓட்டிய வாகனத்தை நிறுத்தக்கூடிய சூழ்நிலையில் இல்லை. எனக்கு வலது கை முட்டியில் காயம் ஏற்பட்டது.

நான் வலது கையை வாகனத்திற்கு வெளியில் வைத்திருந்ததால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய வாகனம் எந்த சரக்கும் ஏற்றிச் செல்லவில்லை. நான் வாகனத்தை ஓட்டும்போது அவசரமாக செல்லும் சூழ்நிலை இருக்கும் என்றால் அவ்வாறு இல்லை. எனக்கு மருத்துவ செலவாக ரூ.1,50,000/- ஆனது. அதற்காக நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் வாகனத்தை வேகமாக ஓட்டியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய அஜாக்கிரதையால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர், கரூர். |